**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

முன்னிலை : திரு. P. ஜேசுபாலன், M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டு பட்டியல் வழக்கு எண். 41/2019**

**in**

**குற்ற எண். 164/2019**

CNR No. TNTV09-000782-2019

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
நன்னிலம் மதுவிலக்கு அமல்
பிரிவு காவல் நிலையம்,
குற்ற எண். 137/2020

... குற்றமுறையீட்டாளர்

/ எதிர் /

**தர்மராஜ், வயது 59/2026,**
த/பெ. சண்முகம்
உடையார் பாளையம்,
தைக்கல் மெயின் ரோடு,
அம்மாபேட்டை,
தஞ்சாவூர் மாவட்டம்.

....குற்றம்சாட்டப்பட்டவர்

<table>
<tr><th>Sl. No.</th><th>Name of the Complaint</th><th colspan="2">Name of the accused</th><th colspan="2">Date of Arrest</th><th>Date of Release</th></tr>
<tr><td>(i)</td><td>State Rep. By<br>The Inspector of Police,<br>Valangaiman.,</td><td colspan="2">Dharmaraj<br>S/o.Shanmugam,</td><td colspan="2">24.02.2019</td><td>01.03.2019</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">Date of filling of the complainant/ final report in the court</td><td colspan="3">Filing of Complainant</td><td colspan="2">Taken on file</td></tr>
<tr><td colspan="3">--</td><td colspan="2">20.12.2019</td></tr>
<tr><td>(iii)</td><td colspan="3">Date of committal of the cases to the court of sessions</td><td>:</td><td colspan="2">Nil</td></tr>
<tr><td>(iv)</td><td colspan="3">Date of questioning of the accused U/s. 4 (1)(aaa) r/w 4 (1)(i) TNP Act as the case</td><td>:</td><td colspan="2">09.10.2025</td></tr>
</table>

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.12 21:45:16 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | may be | | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | **Nil** | **Nil** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | Date of Examination in Chief and Cross | | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW 1 | Jeyaseelan | 02.03.2026 | 02.03.2026 |
| | | PW 2 | Gnanasumathi, | 02.03.2026 | 02.03.2026 |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | | 09.03.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/Production as the case may be: | | | | Nil |

| | | | | |
|---|---|---|---|---|
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டு | | U/s. 4(1)(aaa) of TNP Act ன் படி கடந்த 24.02.2019 ம் தேதி 09.00 மணிக்கு நன்னிலம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் சரகம் அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகே இவ்வழக்கின் எதிரி சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்களை எந்த விதமான அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றம் |
| இரண்டாவதாக | | U/s. 4(1) (i) Of TNP Act ன் கீழ் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:22 +0530

| | | |
|---|---|---|
| | | 18 லிட்டர் பனங்களை வைத்திருந்து மேற்படி பனங்கள் விற்ற பணம் ரூ.100/–ஐ வைத்திருந்த குற்றம் |
| எதிரியின் பதில் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரி மீதான U/s. 4(1)(aaa) & 4 (1) (i) of TNP Act ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | | எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு கள் 4 (1)(aaa) & 4(1) (i) ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவுகள்4 (1)(aaa) & 4(1) (i) ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு **20.12.2019** அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து அரசின் சார்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு. V. சுதா அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.B. மகேஸ்வரன், B.sc., B.L., அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு இன்று (**12.03.2026**) இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 24.02.2019 ந்தேதி 09.00 மணிக்கு நன்னிலம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் சரகம் அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகே இவ்வழக்கின் எதிரி சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:28 +0530

குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்களை எந்த விதமான அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததும், மற்றும் பனங்கள் விற்ற பணம் ரூ.100/– வைத்திருந்ததால் எதிரியின்மீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவுகள் 4(1)(aaa) & 4 (1) (i) TNP Act –ன்கீழ் வலங்கைமான் காவல் நிலைய காவல் ஆய்வாளர் பிரிவு 173(2)–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும் அவருக்கு இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3)** பின்னர் எதிரிக்கு எதிரான குற்றம் குறித்து எதிரியிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். பின்னர் எதிரிக்கு எதிராக தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவுகள் 4(1)(aaa) & 4 (1) (i) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து குற்றவாளி அல்ல என கூறி வழக்காட தனது விருப்பத்தை தெரிவித்தார்.

**4)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.12 21:45:33 +0530

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

**5.1.** அ.சா.1 ஜெயசீலன், தனது சாட்சியத்தில் தான் தற்போது மதுவிலக்கு அமல்பிரிவு, நன்னிலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 24.02.2019 ம் தேதி 09.00 மணியளவில் தானும் தன்னுடன் பணிபுரிந்த தலைமைக் காவலர் ராஜசங்கர் என்பவரும் வலங்கைமான், ஆய்வாளர் திருமதி. ஞானசுமதி அழைத்ததின் பேரில் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகில் நின்றுகொண்டிருந்த எதிரியை விசாரித்து சோதனை செய்தபோது சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் மற்றும் பனங்கள் விற்ற பணம் ரூ.100/–ம் மறைத்து வைத்திருந்ததாகவும், அவ்வாறு வைத்திருப்பதற்கும், விற்பதற்கும் உரிமமோ, அனுமதியோ எதிரியிடம் இல்லை என்றும், எனவே குற்ற காரணம் கூறி எதிரியை ஆய்வாளர் கைது செய்தார் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எதிரி வைத்திருந்த வழக்கு தடயத்தை மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதில் தாங்கள் இருவரும் உடனிருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் 10.00 மணியளவில் வழக்கு தடயத்தை பாதுகாப்பான முறையில் கொட்டி அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார் என்றும், அதில் தாங்கள் இருவரும் உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:39 +0530

தன்னுடையதுதான் என்றும், அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரிமீது வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண். 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம் எனவும், ஆய்வாளர் தன்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தார் என்று சாட்சியமளித்துள்ளார்.

**5.2. அ.சா.2 ஞானசுமதி,** காவல் ஆய்வாளர், தனது சாட்சியத்தில் தான் தற்போது திருச்சி பொருளாதார குற்றப்பிரிவில் ஆய்வாளராக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 24.02.2019 ம் தேதி 09.00 மணியளவில் நன்னிலம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்த போது தானும் தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்களுடன் மது விலக்கு சம்மந்தமாக வலங்கைமான் காவல் சரகத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போது அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகில் நின்றுக்கொண்டிருந்த எதிரி தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்து பிடித்து விசாரிக்க எதிரி உமது பெயர் மற்றும் முகவரியை கூறினார் என்றும், அவரை தான் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்து எதிரி நின்ற இடத்தை சோதனை செய்தபோது எதிரி நின்ற இடத்தில் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடத்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் 1 பிளாஸ்டிக் கப்பும் மற்றும் பணம் ரூபாய். 100ம் வைத்திருந்தார் என்றும், தான் அவ்வாறு எதிரியிடம் வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் அரசு அனுமதியோ உரிமமோ உள்ளதா என்று கேட்ட போது எதிரி அவ்வாறு அனுமதியும் உரிமமோ இல்லை என்று கூறினார் என்றும்,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:45 +0530

எனவே தான் எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து எதிரி வைத்திருந்த 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடத்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளை தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியும் சாராயத்தை பிரிவு 32 TNP Act ன் படி சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்தும் அழிப்பு மகசர் தயார் செய்தேன் என்றும், கைப்பற்றுதல் மகசரிலும் அழிப்பு மகசரிலும் தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்களிடம் சாட்சிகளாக கையொப்பம் பெற்றேன் என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் முறையே **அ.த.சா.ஆ.3** மற்றும் **அ.த.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலையக் குற்ற எண் 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், ( முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) என்றும், தன்னுடன் பணியிலிருந்த ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், வழக்கு தடயத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், படிவம் 91 **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற எண். 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** அ.சா.1 மற்றும் அ.சா.2 அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகள் குறித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 (1) (பி) ன் கீழ் வினவியபோது எதிரி அவர்களது சாட்சியம் அனைத்தும்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:51 +0530

பொய்யானவை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

**7)** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில் எதிரிக்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**8. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,**

எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 4 (1) (aaa), 4 (1) (I) ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள் மற்றும் பனங்கள் விற்ற பணம் ரூ.100/− வைத்திருந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.

**தீர்வு:**

**9.** அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1, மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் தகவலின் பெயரில் ரோந்து சென்று எதிரியிடமிருந்து சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்களை கைப்பற்றினர். அ.சா.1 எதிரிக்கு எதிராக கைப்பற்றுதல் மகஜரிலும் மற்றும் அழித்ததற்கான அழிப்பு மகஜரிலும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளதாக பதிவு செய்யப்பட்டது குறித்து சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 எதிரிக்கு எதிராக கைப்பற்றுதல் மகஜர், அழிப்பு மகஜர், முதல் தகவல் அறிக்கை மற்றும் படிவம் 91 தாக்கல் செய்து

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:45:56 +0530

இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**10.** அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 ஜெயசீலன் தலைமை காவலர், அ.சா.2, ஞானசுமதி காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் நன்னிலம் மதுவிலக்கு அமல் பிரிவில் பணிபுரிந்தபோது, காவல் ஆய்வாளர் ஞானசுமதி என்பவர் தலைமையில் அ.சா.1ம், முதல் நிலை காவலர் ஜெயசீலன் ஆவர்களுடன் புறப்பட்டு மதுவிலக்கு குற்றம் சம்மந்தமாக வலங்கைமான் காவல் சரகத்திற்குட்பட்ட சுள்ளாரு பனந்தோப்பு அருகில் கண்காணித்து வந்தபோது ஆஜர் எதிரி தர்மராஜ் என்பவர், 4 மண் பானைகளில் தலா 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளை அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரை கைப்பற்றி அதில் மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள தடை செய்யப்பட்ட பனங்கள்ளை அழித்து அ.சா.ஆ.4 அழிப்பு மகஜர் தயார் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர்.

**11.** எனவே, மேற்படி சாட்சிகளின் மூலம் எதிரி சட்ட விரோதமாக 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்களை வைத்திருந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யாரும் சாட்சிக்கு முன் வராததால் அ.சா.1ம், ராஜாசங்கர் என்பவரும் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.ஆ. 3 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 அழிப்பு மகஜர் ஆகியவை தனிப்பட்ட சாட்சிகள் முன்னிலையில் தயாரிக்கப்படாமல் காவல் துறை சாட்சிகளான அ.சா.1 மற்றும் ராஜாசங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டுள்ளதால்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:02 +0530

எதிரியிடமிருந்து 108 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

**12.** மேலும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பனங்கள்ளானது ஞானசுமதி காவல் ஆய்வாளர் அவர்களால் சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டு அ.சா.ஆ.4 அழிப்பு மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, அழிப்பு மகஜர் முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை பொறுத்து பரிசீலனை செய்கையில், இதுசம்மந்தமாக தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32 ன்படி மது அழிக்கப்படுவதற்கு, மாதிரிகள் எடுக்கப்படுவதற்கு, உரிய சான்றிதழ் தயாரிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Selvi– vs – State on 18 March 2011 என்ற வழக்கில்,

*Now, coming to the occurrence on 27.09.2004, the prosecution relies on the evidences of P.W.8 and P.W.4. It is stated by both the witnesses that the accused was found in possession of illicit arrack in a plastic can as well as in two lorry tubes. As I have already narrated, it is their case that they were seized under mahazar in the presence of P.W.4 by P.W.8. But, the contraband namely, the illicit arrack said to have been seized from the appellant was not produced before the court. Instead, P.W.8 would state that he destroyed the same in the presence of P.W.4 at the place of occurrence after drawing sample in two bottles. The question is whether he has got power to do so. As per the third proviso to Section 32(c) of the TNP Act, he has got power to do so, but there are other provisions which are to be followed before doing so. At this juncture, it is worthwhile to reproduce the said provision viz., Section 32 (c) of the TNP Act which reads as follows: –*

*"32. Arrest of offenders and seizure of contraband liquor and articles without warrant. – Any Prohibition Officer, any officer of the police or Land Revenue Departments, and any other person authorised in that behalf –*

*(a) .... ... ... ...*

*(b) .... ... ... ...*

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:07 +0530

*(c) may search any person, vessel, vehicle, animal package, receptacle or covering, upon whom or in or upon which, he may have reasonable cause to suspect any such liquor, drug or other article to be or to be concealed:*

*Provided that ........................*

*Provided further that ........................*

*Provided also that where any illicit arrack is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a Prohibition Officer or any Police Officer not below the rank of Inspector, –*

*(i) take two samples of the illicit arrack or such quantity and in such manner as may be prescribed, and*

*(ii) destroy or cause to be destroyed the illicit arrack and send the pots or other receptacles in which the illicit arrack was kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the illicit arrack was destroyed, as to the total quantity or illicit arrack seized, the total quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. The Magistrate shall, upon the receipt of the samples, retain one in his court and send the other to such Officer as may be prescribed for chemical analysis."*

*[Emphasis supplied]*

*10. A close reading of the above third proviso to Section 32 (c) of the Tamil Nadu Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can draw samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband. In respect of the destruction, the said prohibition officer or police officer, in whose presence the destruction is done, should give a certificate in respect of the total quantity seized, the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having jurisdiction. But, in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police. It may be true that P.W.8 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso. In a case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same*

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:13 +0530

*after drawing samples, in order to ensure that samples were really taken from the illicit arrack seized and that the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely, a prohibition officer or any police officer not below the rank of Inspector is insisted upon. This procedure, in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seizes the illicit arrack. In this regard, I may refer to a judgement of a Division Bench of this Court in Jegannathan v. State of Tamil Nadu reported in Manu/TN/8992/2006 wherein while dealing with a Habeas Corpus Petition challenging the order of detention passed under Tamil Nadu Act 14 of 1982 , the Division Bench, while noticing Section 32 of the Tamil Nadu Prohibition Act and after referring to various orders passed on the earlier occasions, has held in paragraphs 3 and 4 as follows:-*

*"3. At the foremost, the learned counsel for the petitioner by drawing our attention to the reference made in paragraph 3 of the grounds of detention viz., the remaining I.D arrack and fermented wash were destroyed at the spot a "certificate was prepared to that effect, submitted that no such certificate was prepared as per Section 32 of the Tamil Nadu Prohibition Act, 1937 and the only document available is destruction mahazar. According to him, in the absence of the certificate as stated in paragraph 3 of the detention order, it is presumed that the detaining authority has not applied his mind while passing the detention order. He has also heavily relied on the decision of this Court dated 25.09.2003 in HCP No.2580 of 2002, which was followed by this Court in HCP No.140 of 2006 by an order dated 13.06.2006. In that case, before the Division Bench, a similar contention was raised. A perusal of the details mentioned in the said decision shows that in that case also the destruction mahazar alone was prepared and a copy was supplied to the detenu. However, as in the present case, the detaining authority therein referred to the said document as a certificate prepared under Section 32 of The Tamil Nadu Prohibition Act, 1937. The Division Bench after finding that the document available in the paper book does not amount to certificate in terms of Section 32 of The Tamil Nadu Prohibition Act, 1937 and after holding that the detaining authority has not applied his mind, quashed the detention order.*

*4. On-going through the factual details in our case, particularly the reference made in para 3 as well as the document, we are of the view that the decision relied on by the learned counsel for the petitioner is directly applicable to the case on hand. Inasmuch as the detaining authority has referred the destruction mahazar as a certificate in terms of Section 32 of The Tamil Nadu Prohibition Act, 1937, we are satisfied that the detaining authority has not properly applied his mind and, on this ground, the impugned detention order is liable to be quashed and accordingly, the same is quashed."*என்று கூறியுள்ளது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:19 +0530

**13.** மேற்படி பிரிவின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், கைப்பற்றப்பட்ட பணங்கள் மதுவிலக்கு அலுவலர், காவல் அலுவலர் அல்லது நில வருவாய் துறை அலுவலர் அல்லது இதன் பொருட்டு அதிகாரம் வழங்கப்பட்ட நபர் எவரேனும் பிடிகட்டளையின்றி குற்றவாளிகளை கைது செய்து தடய பொருளான பணங்கள்ளை கைப்பற்றலாம் ஆனால் ஏதேனும் அலுவலர் அல்லது நபர் இச்சட்டத்தின் கீழ் கள்ளச்சாராயம் அல்லது பணங்கள்ளை கைப்பற்றினால் அவ்வாறான நபர் அல்லது அலுவலர் மதுவிலக்கு அலுவலர் முன்னிலையில் அல்லது ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அல்லாத வேறொரு காவல் அதிகாரி முன்னிலையில் குறிப்பிட பெற்ற வழிமுறைகளில் குறிப்பிட பெற்ற அளவில் கள்ளச்சாராயத்தின் மாதிரிகள் எடுத்த பின்னர் கள்ளச்சாராயத்தை அழித்து அல்லது அழித்துவிட செய்து உத்தரவிடலாம். மேலும் மேற்படி தடய பொருள் வைக்கப்பட்டிருந்த பானைகள் மற்றும் களங்களை எடுக்கப்பட்ட மாதிரிகளுடன் சேர்த்து அளிக்கப்பட்ட கள்ளச்சாராயத்தின் மொத்த அளவு எடுக்கப்பட்ட மாதிரிகளின் மொத்த அளவு முதலென குறிப்பிட பெற்ற சான்றிதழ் ஒன்றின் முன்னிலையாகியிருந்த அலுவலரிடம் பெற்று அளிக்கப்பட வேண்டும் என்பதை அறிய முடிகிறது. ஆனால் இவ்வழக்கில் ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட பணங்கள் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அல்லாத வோறொரு காவல் ஆய்வாளர் முன்னிலையில் மாதிரிக்கு எடுக்கப்பட்டு அழிக்கப்படவில்லை என்பதாலும் மேலும் தனிநபர் சாட்சியம் மூலம் எதிரியிடம் இருந்து தடய பொருள் கைப்பற்றப்பட்டது என்பது பற்றியோ அல்லது தடையபொருள் அழித்தது பற்றியோ எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இந்நீதிமன்றத்தில்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:26 +0530

தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.4 அழிப்பு மகஜர் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**14.** எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து எதிரியிடமிருந்து20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டது என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்பதாலும், மேலும் கைப்பற்றப்பட்ட பனங்கள்ளானது அழிக்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ.4 அழிப்பு மகஜர் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்பதாலும், அரசு தரப்பில் எதிரியிடமிருந்து 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்களை விற்பனை செய்து, ரூ.100/– பணத்தையும் வைத்திருந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே, எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவுகள் 4 (1)(aaa) & 4(1) (i) ன் கீழான குற்றம் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15. முடிவாக**, எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு கள் 4 (1)(aaa) & 4(1) (i) ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிக்கு எதிரான தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவுகள்4 (1)(aaa) & 4(1) (i) ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:32 +0530

**16.** இவ்வழக்கில் **சி.பி. எண். 67/2019–**ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1) 6 பிளாஸ்டிக் குடங்கள் அ.சா.பொ.1 ம், 2) பணம் ரூ.100/– அ.சா.ஆ.2 ம், 3) பிளாஸ்டிக் மக் அ.சா.ஆ.3 ம் ஆகிய தடய பொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அ.சா.பொ.2 ஐ அரசுக்கு ஆதாயம் செய்திடவும். அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.3 பொருட்களை அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்த பின்பு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**வலங்கைமான்.**

## பிறசேர்க்கை

அரசுத் தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. ஜெயசீலன் – தலைமை காவலர் |
| 2 | அ.சா.2 | திருமதி. ஞானசுமதி – காவல் ஆய்வாளர் |

அரசுத்தரப்பு சான்றாவணங்கள்

| | |
|---|---|
| 1 | அ.சா.ஆ.1 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 ன் இரண்டாவது கையொப்பம் |
| 2 | அ.சா.ஆ.2 – அழிப்பு மகஜரில் உள்ள அ.சா.1 ன் இரண்டாவது கையொப்பம் |
| 3 | அ.சா.ஆ.3 – கைப்பற்றுதல் மகஜர் |
| 4 | அ.சா.ஆ.4 – அழிப்பு மகஜர் |
| 5 | அ.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை |

6 அ.சா.ஆ.6 – படிவம் 91

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் –</u> சி.பி. எண்.67/2019

அ.சா.பொ.1. பிளாஸ்டிக் குடங்கள் – 6

அ.சா.பொ.2. பனங்கள் விற்ற பணம் ரூ.100/–

அ.சா.பொ.3 பிளாஸ்டிக் மக் – 1

<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும், சான்றாவணங்கள்</u> : **இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.12 21:46:48 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**வலங்கைமான்.**

**<u>குறிப்பு</u> :**

1. வழக்கு விசாரணையின் போது எதிரி இவ்வழக்கில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு எதிரிக்கும்/காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்புரை நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.